# இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்


நானே திராட்சைக் கொடி; நீங்கள் அதன் கிளைகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது. என்னோடு இணைந்து இராதவர் கிளையைப் போலத் தறித்து எறியப்பட்டு உலர்ந்து போவார். அக்கிளைகள் கூட்டிச் சேர்க்கப்பட்டு நெருப்பிலிட்டு எரிக்கப்படும். நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும். நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது.” (யோவான் 15: 5-8)



# மே மாதத்தில் முதல் உலக குழந்தைகள் நாள் கொண்டாடம்

## திருத்தந்தை அறிவிப்பு

**வத்திக்கான்:** கத்தோலிக்கத் திருஅவையில் முதல் முறையாக **“இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்” என்ற கருப்பொருளில் மே மாதம் 25, 26 ஆகிய நாள்களில் திருஅவையில் முதல் உலக குழந்தைகள் நாள் சிறப்பிக்கப்பட உள்ளது.**

குழந்தைகளே நான் உங்களுக்காகக் காத்திருக்கிறேன் என்ற முதல் உலக குழந்தைகள் நாளுக்கான திருத்தந்தையின் அழைப்பானது திருஅவையின் வரலாற்றில் மிக முக்கியமான நாளாக இருக்கும் என்ற உணர்வைத் தருகின்றது என்று கருத்துத் தெரிவித்தார் திருத்தந்தை என்று அருள்பணி ஃபொர்த்துனோ கூறினார்

திருத்தந்தையின் ஞாயிறு மூவேளை செப உரையின்போது, போரினால் பாதிக்கப் பட்ட பகுதிகள் உட்பட பல பகுதி களிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட சிறார் பங்கேற்றனர் என்று கூறிய அருள்பணி ஃபொர்த்துனோ அவர்கள், மே மாத நிகழ்வில் பங்கேற்பதற்காக பல இலட்சம் குழந்தைகள் உலகெங்கிலும் இருந்து முன்பதிவு செய்துள்ளனர் என்றும், 80 பகுதிகளிலிருந்து வரும் இலட்சக் கணக்கான குழந்தைகள் தூய பேதுரு வளாகம் மற்றும் ஒலிம்பிக் அரங்கத்தை வண்ணமயமாக்க இருக்கின்றார்கள் என்றும் எடுத்துரைத்தார்.

மேலும் மூவேளை செப உரையின் போது, தொடர்ந்து அமைதிக்காக தனது விண் ணப்பங்களைத் துணிவுடன் எடுத்துரைத்துக் கொண்டிருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வேண்டுகோள்களுக்கு உலகின் தலைவர்கள் செவிசாய்க்க வேண்டும் என்றும் கூறினார் அருள்பணி ஃபொர்த் துனோ.

“இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்” என்ற திருவெளிப்பாடு



நூலின் இறைவார்த்தைகளானது குழந்தை களைப்போல ஞானமுள்ளவர்களாகவும், புதியவற்றை புரிந்து கொள்ளவும், நமக்குள்ளும் நம்மைச்சுற்றிலும் நடக்கும் எதார்த்தங்களைப் புரிந்துகொள்ளவும் அழைப்பு விடுக்கின்றது என்றும் கூறியுள் ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இத்தகைய சிறிய விடயங்களில் நாம் எடுக்கும் சிறு முயற்சியால் உலகம் மாறும் என்றும், நாம் பலராயிருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கிறோம்; ஒருவருக்கொருவர் உடனுறுப்புகளாய் இருக்கிறோம். என்ற தூய பவுலின் வரிகளையும் மேற்கோள்காட்டியுள்ளார்.

ஓர் உறுப்பு துன்புற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து துன்புறும். ஓர் உறுப்பு பெருமை பெற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து மகிழ்ச்சியுறும் என்ற இறைவார்த்தைகளுக்கிணங்க, நாம் மகிழ்வுடன் இணைந்து வாழ வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

*மெரினா ராஜ் - வத்திக்கான்*

## யூபிலி ஆண்டுக்கான இறைவேண்டல்




விண்ணகத் தந்தையே,

உம் திருமகனும் எம் சகோதரனுமான இயேசு கிறிஸ்துவில் நீர் எங்களுக்கு வழங்கிய நம்பிக்கைக்கும் தூய ஆவியார் வழியாக எங்கள் இதயங்களில் நீர் பற்றியெரியச் செய்தப் பிறர் அன்புச் சுடரும், உமது அரசின் வருகைக்கான எதிர்நோக்கை எங்களில் தட்டி எழுப்பு வனவாக!

நற்செய்தியின் விதைகளை நாளும் வளர்த்தெடுக்கும் நல்லோராய் உம் அருள் எம்மை மாற்றுவதாக! தீமையின் ஆற்றல்கள் மறைந்து உம் மாட்சி நீடித்து ஒளிரும் பொருட்டு மானிட உள்ளங்கள் புதிய விண்ணகம் புதிய மண்ணகம் நோக்கிய காத்திருத்தலில் மாற்றம் பெறுவனவாக!

யூபிலி கொண்டாட்டத்தின் அருள் விண்ணக வாழ்வுக்கான ஆர்வத்தை `எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய' எம்மில் தூண்டி எழுப்புவதாக! அதே அருள் எம் மீட்பின் மகிழ்ச்சியையும் அமைதியையும் அகிலமெங்கும் அளிப்ப தாக!

என்றென்றும் போற்றற்குரிய எம் கடவுளாகிய உமக்கே மாட்சியும் புகழும் இன்றும் என்றும் உரித்தாகுக.

ஆமென்.

## திருத்தந்தையின் வருகை சிங்கப்பூரில் புதுப்பித்தலைத் தூண்டும்

**சிங்கப்பூர்:** எதிர்வரும் மே மாதம் ஆசிய பசிபிக் பகுதிக்கான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செப்டம்பர் 11-13 வரையிலான சிங்கப்பூர் வருகையையொட்டி கருத் துரைத்த சிங்கப்பூர் பேராயர் கர்தினால் வில்லியம் கோ, சிங்கப்பூர் திருஅவை அவரது வருகையால் புத்துயிர் பெறும்ஃ என்று நம்பிக்கை தெரிவித்தார்.

ஓர் ஊடக வெளியீட்டில், சிங்கப்பூரின் கத்தோலிக்க மக்களை ஒன்றிணைத்து புனித தந்தையின் வரவிருக்கும் வருகைக் காக இறைவேண்டல் செய்யுமாறு கர்தினால் கோ வேண்டுகோள்விடுத்தார். "ஒரு சமூகமாக, திருத்தந்தையின் தொடர்ச்சி யான உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்காக இறைவேண்டல் செய்வோம், மேலும் உண்மையான அர்த்தமுள்ள மற்றும் இரக்கமிகு வருகையாக அவரது வருகை அமைய வேண்டும் என்றும் இறைவனை மன்றாடுவோம் என்றார்.


சிங்கப்பூர் பேராயர் கர்தினால் கோ

சிங்கப்பூர் கத்தோலிக்கர்கள் ஆன்மீக ரீதியில் "திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வருகையின் மூலம் இயேசுவை சந்திக்க" ஆன்மீக ரீதியில் தயாராவதற்கு உதவுவதற்காக, சிங்கப்பூர் உயர்மறை மாவட்டம், செப்டம்பரில் தேவையான இறைவேண்டல்கள், இயங்கலை விபரங்கள் மற்றும் பிற அறிவிப்புகளைக் கொண்ட ஒரு சிறப்பு இணையதளத்தை சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. 2024 ஆம் ஆண்டு போப்பாண்டவர் வருகை நிகழ்வைக் குறிக்கும் வகையில், “ஒற்றுமை, எதிர் நோக்கு மற்றும் சிலுவை” என்ற பேராயர் தேர்ந்தெடுத்த முகருப்பொருளையும் இணையதளம் வெளியிட்டது.

1986 ஆம் ஆண்டு, திருத்தந்தை இரண்டாம் ஜான் போல் சிங்கப்பூரில் ஓர் ஐந்து மணிநேரம் தங்கியிருந்து, தேசிய அரங்கத்தில் ஆயிரக்கணக்கான மக்களுடன் திருப்பலி கொண்டாடிய போதுதான், கடைசியும் முதலுமாக ஒரு திருத்தந்தை சிங்கப்பூருக்கு வருகை தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருத்தந்தையின் சிங்கப்பூர் பயண நிகழ்வையொட்டிய எச்சரிக்கை!

**வத்திக்கான்:** திருத்தந்தை பிரான்சிஸ் இந்த ஆண்டின் முதல் வெளிநாட்டுப் பயணத்தையும், 11 ஆண்டுகால திருத் தந்தை பொறுப்புபில் பதவியில் மிக நீண்ட பயணத்தையும் மேற்கொள்கிறார், இந்தோனேசியா, பப்புவா நியூ கினியா, திமோர்-லெஸ்டே மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு செப்டம்பர் 2-13 வரை பயணம் மேற்கொள்வார் என்று வத்திக்கான் வெள்ளிக்கிழமை தெரிவித் துள்ளது.



சிங்கப்பூர் நாட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் செப்டம்பர் மாதம் 11 முதல் 13 வரை திருத்தூதுப் பயணம் மேற்கொள்ள உள்ள நிலையில், திருத்தந்தையின் பயண நிகழ்வுகளில் பங்கேற்பது தொடர்புடைய அனுமதிச் சீட்டுகளுக்கு திருஅவையின் அதிகாரப் பூர்வத் தளத்தை மட்டுமே நம்புமாறு அழைப்புவிடுத்துள்ளது தலத்திருஅவை.

சிங்கப்பூர் மக்களுக்கு இத்தகவலைத் தெரிவித்துள்ள சிங்கப்பூர் தலத்திருஅவை, திருத்தந்தையின் திருப்பயணத்தோடு தொடர்\ புடையவர்கள் என காட்டிக் கொண்டு ஏமாற்ற முயலும் தனியார்கள் மற்றும் அமைப்புக்கள் குறித்து கவனமாக செயல்படவேண்டும் எனவும், எந்த ஒரு தகவலுக்கும் திருஅவையின் அதிகாரப்பூர்வ வலைத்தளங்களையே அணுகுமாறும் விண் ணப்பித்துள்ளது.

திருத்தந்தையின் திருப்பலியில் கலந்து கொள்ள விரும்புவோருக்கு உதவுவதாகக் கூறி அவர்களிடமிருந்து தனிப்பட்ட விவரங் களை சில அமைப்புக்கள் சேகரிப்பதைக் குறித்து கேள்விப்பட்டதால் இத்தகைய ஓர் எச்சரிக்கையை விடவேண்டியிருந்தது எனவும் தெரிவித்துள்ளது சிங்கப்பூர் உயர்மறைமாவட்ட அலுவலகம்.

தவறான நபர்களால் சேகரிக்கப்படும் இந்த விவரங்கள் பின்னர் தவறாக பயன் படுத்தப்படும் ஆபத்து இருப்பதையும் சிங்கப்பூர் பேராயரின் தகவல் தொடர்பு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

திருத்தந்தையின் திருப்பலியில் பங்கேற்க விரும்புபவர்களுக்கான அனுமதிச் சீட்டு அனைத்தும் இலவசமே எனக்கூறும் தலத்திருஅவை அலுவலகம், 1986ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் தேதி புனித திருத்தந்தை இரண்டாம் ஜான் பாலுக்குப்பின் தற்போதுதான் திருத்தந்தை ஒருவரின் திருப்பயணம் அந்நாட்டில் இடம்பெறுகிறது என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளது.

பிரான்சிஸ் ஜாக்கர்த்தாவில் செப்டம்பர் 3-6, போர்ட் மோர்ஸ்பி மற்றும் வானிமோவில் செப்டம்பர் 6-9, டிலி செப்டம்பர் 9-11 மற்றும் சிங்கப்பூர் செப்டம்பர் 11-13 ஆகிய தேதிகளில் இருக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று அவரது செய்தித் தொடர்பாளர் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

இந்தோனேசியா உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட முஸ்லீம் நாடு மற்றும் அதன் 8 மில்லியன் கத்தோலிக்கர்கள் மொத்த மக்கள் தொகையில் சுமார் 3% ஆவர். இவற்றுள், திமோர்-லெஸ்டே, மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய இரு நாடுகளும் ஆசியாவின் இரு கத்தோலிக்க நாடுகளாக உள்ளன.




# “நான் இருக்கும் இடத்திலே இறையழைத்தலைப் பெற்ற அனைவரும் இருக்க வேண்டும்”

## இறையழைத்தல்-மாட்சிக்குரியது

“அறுவடையோ மிகுதி வேளையாட்களோ குறைவு” என இன்றும் கடவுள் நம் ஒவ்வொருவரையும் தனது பணிக்காக அழைத்துக் கொண்டு தான் இருக்கின்றார். திருவெளிப்பாடு 3:20–ல் “இதோ, நான் கதவு அருகில் நின்று தட்டிக் கொணடிருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டு கதவைத் திறந்தால், நான் உள்ளே சென்று அவர்களோடு உணவருந்துவேன். அவர்களும் என்னோடு உணவருந்துவார்கள்” என்று அழைக்கிறார். மேலும் “நான் இருக்கும் இடத்திலே இறையழைத்தலைப் பெற்ற அனைவரும் இருக்க வேண்டும்” என நம்மையும் கடவுளோடு சேர்ந்து வாழ அழைக்கிறார்.

### இன்றைய சூழலில் இறையழைத்தல்

இன்றைய உலகமானது ஸ்மார்ட் (Smart) உலகமாக மாறிவருகிறது. ஒரு சிறிய ஸ்மார்ட் போனில் இந்த உலகத்தையே சுற்றிப் பார்க்கும் அளவிற்கு வளர்ந்து வருகிறோம். தாயின் கருவில் இருந்து குழந்தை வெளிவந்தவுடன் முதலில் அந்த குழந்தைக்கு நாம் காட்டுவது இந்த ஸ்மார்ட் போன்தான். போட்டோ எடுத்து பேஸ்புக்கில் போட்டு மற்றவர்களிடத்தில் இருந்து பாராட்டுகளை பெருவதைத்தான் பலரும் விரும்புகின்றனர். இப்படியாக குழந்தை பிறந்தது முதல் அவன் கல்லறைக்கு செல்லும் வரை ஸ்மார்ட் போனின் ஆதிகம் எங்கும் நிறைந்து இருக்கிறது.

இப்படிப்பட்ட ஸ்மார்ட் போன் உலகத்தில் இறையழைத்தல் தேவைதானா? என்றும் சிலர் கேட்கின்றனர் மேதைகள்.

இறையழைத்தல் என்பது கடவுளின் அழைப்பு, கடவுள் அழைத்தால் அது மிகப்பெரிய ஆசீர்வாதம். ஆசீர்வாதம் அவருக்கு மட்டுமல்ல அவரது குடும்பம், அவரது உறவினர்கள், அவருடைய ஊர், அவருடைய சமுதாயம், அவர் பணிபுரியும் இடங்கள் என பல வகைகளில் ஆசீர்வாதம் வருகிறது. மேலும் கடவுள் சொல்வது போல தாயின் கருவிலே நான் தேர்தெடுத்தேன் என்று சொல்லும்போது அந்த குழந்தையை பெற்றெடுத்த தாயின் கருவரை ஆசீர்வதிக்கப்பட்டது. அந்த கருவைக் கொடுத்த தந்தையும் ஆசீர்வதிக்கப்பட்டவர். இவ்வளவும் நமக்கு தெரிந்திருந்தாலும், இன்றைய நிலையல் இறையழைத்தலுக்கான மறுமொழி மிகவும் குறைந்து வருகிறது.

### இறையழைத்தலுக்கான மறுமலர்ச்சிக்கு நாம் வித்திடுவோம்

இறையழைத்தல் என்பது அனைவரையும் ஆண்டவரிடம் அழைத்துச் செல்ல உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் தமது வாழ்வை அர்ப்பணிப்பதாகும். இந்த பணியை குருக்கள் மட்டுமே செய்ய வேண்டும் என்பதல்ல. மாறாக மனிதனாக பிறந்த அனைவருக்குமே இது பொதுவானது. இயேசுவுக்காக பணிசெய்ய அனைவருக்கும் உரிமை உண்டு. இயேசுவின் நற்செய்தி பணியை செய்ய நாம் நமது குழந்தைகளை அனுப்பலாம். அவர்கள் குருக்களாக உருவாகி இயேசுவின் நற்செய்தியை எடுத்துச் சொல்லக்கூடியவர்களாக மாற்றம் பெறக் கூடும். இந்த சிந்தனைப் புரட்சி நம்மில், நம் குடும்பத்தில்தொடங்கட்டும். இறை யழைத்தலுக்கான மறுமலர்ச்சிக்கு நாம் வித்திடுவோம். இறையழைத்தல் மாட்சிக் குரியது.

*ஆர்.கே.*

### இறையழைத்தலில் இறைவேண்டல்

அறுவடையோ மிகுதி வேளையாட்களோ
குறைவு ”என்றுரைத்த ஆண்டவரே,
இளைஞர் பலர் உமது
அழைப்பை ஏற்று, அர்ப்பணிப்போடு
உமது திருப்பணியைத் தொடரவும்,
உமது மறையுடலாகிய திருஅவைக்கு
அணிகலனாகத் திகழவும்,
உலகின் உப்பாகவும் ஒளியாகவும்
விளங்கவும் அருள் செய்வீராக.

ஆண்டவரே! உமது அன்பின் அழைப்பை,
தூய உள்ளமும் தாராள மனதுமுள்ள
பெண்கள் பலருக்குத் தந்தருளும்.
நன்னெறியில் வளர அவர்கள்
கற்றுக் கொள்வார்களாக.
அயலாரின் சேவைக்காகவும்,
அவர்கள் தங்களை அர்ப்பணம் செய்ய
அருள் புரிவீராக .
எங்கள் குடும்பத்திலும்
இறையழைத்தலுக்கான தீ பற்றியெரியச்
செய்தருளும். ஆமென்.

# மிகுந்த கனிதர அழைப்பு– இறையழைப்பு

இன்று பாஸ்கா காலத்தின் 5-ஆம் ஞாயிறு. இணைதல் என்ற கருத்தோட்டத்தில் இன்றைய வாசகங்களைப் பற்றி சிந்திக்க நாம் அழைக்கப்படுகிறோம். முதல் வாசகத்தில் கிறிஸ்தவர்களைத் துன்பறுத்தி வந்த சவுல் இயேசுவோடு இணைந்தது பற்றிய செய்தியை அறிய வருகிறோம். எருசலேம் கிறிஸ்தவர்கள் தொடக்கத்தில் பவுலை ஏற்க மறுத்தபோது, பர்னபா அவருக்குத் துணை நிற்கிறார். இதனால், சவுல் என்ற பவுல் அடிகள் திடம்பெற்று நற்செய்திப் பணிக்கு முன்னோக்கிச் செல்கிறார்.

அவ்வாறே, இரண்டாம் வாசகத்தில், புனித யோவான் நமது அன்பை செயலில் வெளிப்படுத்த அழைப்பு விடுக்கிறார். குற்றமற்றவராக, சாட்சிய வாழ்வு வாழும் போது, நாம் கடவுளின் திருமுன் உறுதியான நம்பிக்கையுடன் நிற்க முடியும் என்று யோவான் வலியுறுத்துகிறார்.

அடுத்து வரும் நற்செய்தியில், இயேசு தம் சீடரை நோக்கிக் “உண்மையான திராட்சைக் கொடிநானே என்று முழக்கமிடுகிறார். திராட்சைச் செடியும், கொடியும், பல சவால்களை நமக்கு முன் வைக்கின்றன. செடியுடன் கொடிகள் இணைந்துவிட்டால், எல்லாம் சுகமாக இருக்கும் என்ற தவறான கற்பனையை இயேசு தரவில்லை. ***“என்னிடமுள்ள***



***கனிகொடாத கொடிகள் அனைத்தையும் என் தந்தை தறித்துவிடுவார். கனிதரும் அனைத்துக் கொடிகளையும் மிகுந்த கனி தருமாறு கழித்து விடுவார்.”*** **(யோவான் 15:2)** என்று இயேசு கூறினார். கனிகொடாத கொடிகள் வெட்டப்படும். கனிதரும் கொடிகளும், கூடுதல் கனி தரவேண்டுமெனில், துன்பங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று இயேசு சொல்கிறார்.

இயேசுவின் அன்பு கட்டளைகளைக் கடைபிடித்தால் நாம் மிகுந்த கனிதருவோம் என்று இரண்டாம் வாசகம் கூறுகிறது, அன்புடைய உள்ளத்தில் அழுக்காறு எதுவும் இருக்காது. அன்பு செய்வோர் எதையும் இழப்பத்தில்லை. ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது என்று இயேசு அறிவுறுத்துவரை கவனத்தில் கொள்ள வேண்டும். அவரின்றி நம்மால் தனித்து எதையும் வெற்றிகரமாக சாதிக்க இயலாது.

மேலும், திராட்சை தானாக நின்று வளரும் செடி அல்ல. மாறாக, தூணையோ, வேலியையோ, அல்லது பந்தலையோ பற்றிக்கொண்டு படரும் ஒரு கொடி. அது பற்றிக்கொள்வதன் நோக்கம் கனிதருதலில் இருக்கின்றது. அவ்வாறே நாமும்.

**பாஸ்கா 5 ஆம் வாரம் - ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | தி.ப. 9: 26-31 |
| திரு.பாடல் | 22: 25b-26. 27,29. 30-31 |
| 2-ம் வாசகம் | 1 யோவான் 3: 18-24 |
| நற்செய்தி | யோவான் 15: 1-8 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**

பொறுமையாக, கடின உழைப்புடன் வளர்க்கப்பட்ட திராட்சைத் தோட்டம் வளமான, சுவையான கனிகளைத் தருவதுபோல், நாம் இதுவரை மேற் கொண்ட முயற்சிகளும், இனி தொடரப் போகும் முயற்சிகளும் நல்ல கனிகளைத் தரவேண்டும் என்பதற்கும், தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படியும் அறுவடையின் உரிமையா ளரிடம் அனுஇனமும் மன்றாடுவோம்.

-ஆர்.கே.